Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 34/2023

**2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | நர்சிங் வேலை |
| பெயர் | - | நந்தினி | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | சுதர்சன் | சமயம் | - | கிறிஸ்டியன் |
| கிராமம் | - | சங்கிலிரோடு | வயது | - | 27 |
| சாதி | - | - | | | |

**22-11-2023**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

**1.** நான் சங்கிலிரோட்டில் வசித்து நர்சிங் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். . கடந்த 24.05.2023-அன்று சாய்ங்காலம் 03.00 மணி இருக்கும். பன்னிமேடு பேக்கட்ரியுள்ள லைனுக்குள் சத்தம் கேட்டு வெளியில் வந்துபார்த்தோம். ஆஜர் எதிரி தர்மலிங்கம் ராஜாராமிடம் சண்டைபோட்டுக் கொண்டிருந்தார்.

2. சுப்பிரமணியன் வந்து கேட்டார். அவரை கேனகூதி, தேவிடியா மகன என்றெல்லாம் கெட்டவார்த்தையால் கேட்டார். அந்த அண்ணன் சுப்பிரமணியன் இப்படியெல்லாம் பேசாதிங்க என்று சொன்னார். இல்ல அப்படித்தான் பேசுவேன் என்னபண்ணுவ என்று கேட்டு பாக்கெட்டிலிருந்து கத்தியை எடுத்து சுப்பிரமணியனின் வலது கை புஜத்தில் குத்திவிட்டார்.

3. அந்த கத்தியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள கத்திதான் அது. அந்த அண்ணன் மயக்கத்தில் கீழே விழுந்துவிட்டார். நான் துணியை எடுத்து கையில் கட்டிவிட்டேன். பன்னிமேடு ஆஸ்பிட்டலுக்கு போன் பண்ணி ஆஸ்பிட்டலுக்கு கூட்டிட்டுபோய் விட்டார்கள்.

4. ஆஜர் எதிரி அவரை அடிக்கிறேன் என்று சொல்லி கால் தடுக்கி கீழே விழுந்துவிட்டார். இவருக்கு முட்டியில் காயமாகிவிட்டது. வண்டியில் கூப்பிட்டுபோய் விட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.